செ.வெ.எண்:25/செப்டம்பர்/2019

நாள்:10.09.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம், புள்ளம்பாடியில் உள்ள மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் 2019 ஆம் ஆண்டிற்கான நேரடிச் சேர்க்கைக்காக விண்ணப்பிக்கலாம். என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப அவர்கள் தகவல்**

---

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், புள்ளம்பாடியில் உள்ள மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் 2019 ஆம் ஆண்டிற்கான நேரடிச் சேர்க்கைக்காக விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பத்தினை online மூலமாக www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். அல்லது நேரில் இந்நிலையத்திற்கு வந்து இலவசமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம். **விண்ணப்பிக்க கடைசி நாள் : 16.09.2019.**

| வ. எ | தொழிற்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்சி காலம் | மகளிருக்கு உச்ச வயது வரம்பு |
|---|---|---|---|---|
| 1. | கம்மியர் மின்னணுவியல்(NCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 2 ஆண்டுகள் | ஏதுமில்லை |
| 2. | டெஸ்க் டாப் பப்ளிஸிங் ஆப்பரேட்டர் (NCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 3. | கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் மற்றும் புரோகிராமிங் அசிஸ்டென்ட் (NCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 4. | சுருக்கெழுத்து மற்றும் செயலக உதவியாளர் (ஆங்கிலம்) (NCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 5. | துணி வெட்டுதல் மற்றும் தைத்தல் (NCVT) | 10-ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 6. | பல்லூடகம் அசைவியல் மற்றும் சிறப்பு விளைவுகள் (Multimedia Animation special effects) (NCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 7. | பூத்தையல் மற்றும் ஊசி வேலைப்பாடு (கணினி மயமாக்கப்பட்டது) Surface Ornamentation Techniques(NCVT) | 10-ம் வகுப்பு தேர்ச்சி | 1 ஆண்டு | ஏதுமில்லை |
| 8 | இயந்திர வேலையாள் (Machinist) (SCVT) | 10 ம் வகுப்பு தேர்ச்சி | 2 ஆண்டுகள் | ஏதுமில்லை |

இத்தொழிற்பயிற்சி நிலையமானது **3 STAR அந்தஸ்து** பெற்ற நிலையமாகும்.

சிறப்பு அம்சங்கள் :

1) பயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்கு NCVT (தேசிய தொழிற்சான்றிதழ் வழங்கப்படும்.
2) பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய Internship training வழங்கப்படும்.
3) பிரபல தொழில் நிறுவனங்களிலிருந்து வளாக நேர்முகத் தேர்வு (Campus Interview) நடைபெற்று வேலையில் அமர்த்தப்படுவர்.

சலுகைகள்:

1) பயிற்சிக் கட்டணம் இல்லை, (2) கல்வி உதவித்தொகை மாதந்தோறும் ரூ.500/-
(3) கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை (4) விலையில்லா மிதிவண்டி
(5) விலையில்லா மடிக்கணினி (6) விலையில்லா பாடப்புத்தகம்,
(7) விலையில்லா வரைபடக் கருவிகள், (8) விலையில்லா சீருடைகள்
(9) விலையில்லா காலணி (10) பெண் பயிற்சியாளர்களுக்கு விடுதி வசதியும் உள்ளது.

இது தொடர்பாக முதல்வர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்(மகளிர்) புள்ளம்பாடி அவர்களை **04329-241300** என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் அறிந்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு**

**செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**